 ISSN : 2454-3993

# ஈழத்தமிழரின் விடுதலைப் போரை முன் வைத்த நாவல்கள் குறித்து...

**ந.முருகேசபாண்டியன்**
mpandi2004@yahoo.com

சங்க இலக்கியத்தில் புறத்திணைப் பாடல்கள் சித்திரிக்கும் உலகம் என்பது பெரிதும் போர்களை மையமிட்டதுதான். தமிழரின் வீரம் என்ற புனைவிற்குப் பின்னால் போரும் போரின் விளைவுகளும் பொதிந்துள்ளன. தமிழர்களான இரு குறுநில மன்னர்களுக்கிடையில் நடைபெற்ற போர் அல்லது சண்டைகளைப் பற்றிய பதிவுகள், புறநானூற்றுப் பாடல்களில் பதிவாகியுள்ளன. ஈழத்தில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்மீது சிங்களத்தை முன்னிறுத்துகிற அரசு நடத்திய வன்முறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த தமிழர்களின் போர், தமிழர் வரலாற்றில் ஒப்பீடு அற்றது. சிங்களப் பேரினவாத அரசினுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த தமிழர்கள், முன்னெடுத்த ஆயுதம் தாங்கிய போர் முற்றிலும் வேறுவகைப்பட்டதாகும். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடிய ஈழத்தமிழர்களின் போராட்டமானது, இன்று 2009, முள்ளிவாய்க்கால் அரசப் படுகொலைகள் சம்பவத்திற்குப் பின்னர் ஓய்ந்துள்ளது. போர் உக்கிரமாக நடைபெற்ற போது, ஈழ மண்ணில் நிகழ்ந்த சம்பவங்கள் ஏற்படுத்திய வடுக்களும் வலிகளும் அளவற்றவை. இயக்கத்தினர் ஆயுதப் பயிற்சி பெற்றுப் போராடத் தொடங்கியபோது பிரசுரமான கோவிந்தனின் புதியதோர் உலகம் நாவல், இயக்கங்களுக்கிடையிலான உள்முரண்களையும், அடாவடிச் சம்பவங்களையும் பதிவாக்கியிருந்தது. பொதுவாகப் போராட்டம் பற்றிய உத்வேகத்தைப் போராளிகளுக்கு ஏற்படுத்துகிறவகையில் இலக்கியப் பதிவுகள், இயக்கங்களினால் வெளியிடப்பட்டுள்ளன. ஈழத்துப் போர்க்களத்தில் நடைபெற்ற சம்பவங்களையும் அன்றைய காலகட்டத்தில் பொது மக்களின் நிலை குறித்தும் ஷோபா சக்தியின் கொரில்லா நாவல் பதிவாக்கியுள்ளது என்றாலும் ஈழத்துப் போர்க்களம் குறித்துப் பெரிய அளவில் புனைகதைகள் வெளியாகாத சூழல் நிலவியது. ஈழத்துப் பிரச்சினையில் இந்திய அரசின் செயல்பாடு, இந்திய அமைதி காப்புப்படை, விடுதலைப்புலிகள், பிற இயக்கங்கள், தமிழர்களின் நிலை, தமிழ் பேசும் முஸ்லீம்கள், சிங்களப் படையினர், சராசரி சிங்களவர் எனப் பல்வேறு போக்குகள் பற்றி மீளாய்வு செய்ய வேண்டிய நேரமிது. இத்தகு சூழலில் 2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஈழப் போராட்டத்தை மையமாகக்கொண்ட நாவல்கள் கணிசமாக வெளியாகியுள்ளன. அவை ஈழத்தமிழர் போராட்டம் குறித்த பதிவாக

விளங்குகின்றன. இரு உலகப் போர்கள், ரஷியா, சீனாவில் நடைபெற்ற சோஷலிசப் புரட்சிக்கான போர்கள் குறித்து நிரம்ப நாவல்கள் ஐரோப்பிய மொழிகளில் வெளியாகியுள்ளன. தமிழைப் பொருத்தவரையில் ப.சிங்காரத்தின் கடலுக்கு அப்பால் (1959), புயலில் ஒரு தோணி (1972) ஆகிய இரு நாவல்களும் தென்கிழக்காசிய நாடுகளில் தமிழகத்துத் தமிழர்கள் பங்கேற்ற இரண்டாம் உலகப் போர்க்களப் பின்புலத்திலானவை. அதற்குப் பின்னர் இன்று ஈழத்தில் வெளியாகியுள்ள போர் நாவல்கள்தான் தமிழர் வரலாற்றில் முக்கியமான சமூக ஆவணங்கள். ‘போராட்ட உலைக்களத்தில் இருந்துதான் இலக்கியம் பிறக்கிறது’ என மார்க்சிய ஆசான் மாவோ சொன்னது போல ஈழத்தமிழரின் போராட்ட வாழ்க்கை குறித்துத் தொடர்ந்து புனைவுகள் பிரசுரமாகிக் கொண்டிருக்கின்றன.

‘அரசியல் என்பது ரத்தம் சிந்தாத போர், போர் என்பது ரத்தம் சிந்தும் அரசியல், என்ற மாவோவின் அரசியல் மேற்கோள், ஈழத்துப் போராட்டக்களத்தைப் புரிந்திட உதவும். தமிழ், சிங்களம் என இரு மொழி பேசுகிற மக்கள் நிரம்பிய ஸ்ரீலங்காவில் புத்த மதப் பிக்குகளின் மேலாதிக்க அரசியலினால், சிங்கள மொழிக்கு மட்டும் முன்னுரிமை நடைமுறைப்படுத்தப்பட்டதனால் ஏற்பட்ட விளைவுகள் கொடூரமானவை. சுமார் 40,000 போராளிகளும், 1,50,000 தமிழர்களும் 90,000 சிங்களப் படையினரும் கொல்லப்பட்டுள்ளனர். போர் காரணமாக ஸ்ரீலங்காவிற்குள்ளும் அயல்நாடுகளுக்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள் எதிர்கொள்கிற துயரங்கள், இன்றளவும் தொடர்கின்றன. எண்பதுகளுக்குப் பின்னர் உக்கிரமடைந்த இயக்கங்களின் கொரில்லாப் போர் முறையினால், ஈழப் போராட்டம் புதிய வடிவம் எடுத்தது. ஒரு காலகட்டத்தில் சிங்கள அரசின் ஒழுங்கமைக்கப்பட்ட ராணுவத்துடன் நேரடியாக மோதுமளவு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ராணுவம் வலிமையுடன் விளங்கியது. ஏறக்குறைய 29 ஆண்டு காலம் இடைவிடாது புலிகள் செய்த போர் என்பது காத்திரமானது. அதேவேளையில் சர்வதேசரீதியில் அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், இந்தியா உள்ளிட்ட நாடுகள் தங்களுடைய ஆயுதப் போராட்டத்தை எப்படி ஒடுக்கிட முயலுகின்றன என்ற அரசியல் புரிதல் இன்மை, போரில் விடுதலைப் புலிகள் அடைந்த தோல்விக்கான முக்கியமான காரணம். ரஷியாவிலும் சீனாவிலும் நடைபெற்ற புரட்சிகளின்போது நடைபெற்ற ஆயுதம் தாங்கிய எழுச்சி அல்லது போர் தந்த பாடங்கள் குறித்து அறிதல் எதுவுமில்லாமல், வெறுமனே ஆயுத பலத்தை மட்டும் நம்பியது, ஈழப்போராட்டத்தின தோல்விக்கு வழிவகுத்ததா? யோசிக்க வேண்டியுள்ளது.

ஈழப் போராட்டம் தொடங்குவதற்கான பின்புலம் தொடங்கி முள்ளிவாய்க்கால் படுகொலையும் முள்வேலி முகாம்களும் என விவரிக்கப்படுகிற சம்பவங்களும் கதைகளும் முடிவற்றுத் தொடர்கின்றன. தமிழினத்தின் ஒர்மையில் காலந்தோறும் தொடர்கிற கசப்பான நினைவுகளும் துயரங்களும் ஆழமாகப் பதிந்திருக்கும். இப்படியெல்லாம் நடந்தன என்ற கதைசொல்லிகளின் விவரிப்புகள், முடிவடையாமல் நீள்கின்றன. ஐரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும் வாழ்கிறவர்கள், தமிழீழம் எங்கள் தாயகம் என்று ஆவேசத்துடன் முழங்கியவர்கள், நடப்பில் ஈழத்தில் போராளிகளும மக்களும் அடைந்த துயரத்தையும வலியையும் அறிந்திடாதவர்கள். இந்தியாவில்

இருந்துகொண்டு தமிழீழம், விடுதலைப்புலிகள், போர் என்று அரசியல் செய்து, வாய்ச்சவடால் அடித்த கருணாநிதி, வை.கோ., சீமான், நெடுமாறன் போன்றோர், இக்கட்டான நேரத்தில் நெட்டை மரமென நின்றதுதான் வரலாறு. ஈழப் போருக்காக இன்னுயிரைத் தந்து போராடிய இயக்கப் போராளிகள் அனுபவித்த துயரங்களும், அவர்களுக்குப் பின்புலமாக இருந்த ஈழத்தமிழரின் இழப்புகளும் காற்றில் கரைந்து போகிற விஷயங்கள் அல்ல. இன்னும் நூறாண்டுகள் கழித்துப் பிறக்கும் தமிழர்களின் குழந்தைகளுக்கு ஈழப் போர் குறித்த அறிமுகமாக நாவல்கள்தான் இருக்கும். சயந்தன், ஷோபா சக்தி, குணா கவியழகன் தமிழ்நதி, வெற்றிச்செல்வி, விமல் குழந்தைவேல், சாத்திரி, ஸர்மிளா ஸெய்யித் போன்றோர் எழுதியுள்ள நாவல்கள், கடந்தகாலத்தின் பதிவுகளாக விளங்குகின்றன. ஈழத்தமிழரின் வீரமான போர் என்பது, இரண்டாயிரமாண்டுத் தமிழர் வரலாற்றில் என்றும் நிலைத்திருக்க நாவல்கள்தான் சாட்சியங்கள்.

எழுபதுகளில் மலையகத் தமிழர் எதிர்கொண்ட சிங்களக் காடையர்களின் வன்முறை சம்பவத்தில் தொடங்கிடும் சயந்தனின் ஆதிரை நாவல், முள்ளிவாய்க்கால் படுகொலைக்குப் பின்னரும் தமிழர் வாழ்க்கை எப்படி இருக்கிறது என விலாவாரியாகப் பேசுகிறது. வன்னியின் பூர்விகக் குடியினர், குடியேறிய மலையகத் தமிழர்கள், போரினால் இடம்பெயர்ந்து தஞ்சமடைந்துள்ள யாழ்ப்பாணத்தார் எனப் பலரின் அன்றாட வாழ்க்கையின் குவிமையமாகக் கதை சொல்லப்பட்டுள்ளது. ஈழவிடுதலைப் போராட்டக்களத்தில் பெரிய அளவில் முன்னணியில் செயலாற்றியவர்கள், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பொருளியல், சாதிரீதியல் ஒடுக்கப்பட்டவர்களும், மலையகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வன்னியில் குடியேறியவர்களும் ஆவர் என்ற சயந்தனின் கணிப்பு முக்கியமானது. நாவல் முழுக்க யாழ்ப்பாணத்து வெள்ளாளர்களில் வசதியானவர்கள் எப்படியாவது நாட்டை விட்டு வெளியேறுவதும், விளிம்புநிலையினர் ராணுவத்தின் ஷெல்லடிகளுக்கடையில் வாழ்வதும் நடைபெறுகிறது. எளிய மனிதர்கள் மீது போரினால் உருவான வன்முறை இடைவிடாமல் துரத்துகிறது. நாவலில் நிறைய துர்க்கனவுகள் மனிதர்களை விரட்டுவது போல அரசியலின் சூழ்ச்சியினால் ரத்தமும் சதையுமாக குண்டுகளினால் பிய்த்தெறிப்படுவதுதான் வாழ்வின் கோரம். இரண்டாயிரமாண்டில் "மட்டக்கிளப்பில் பிடிச்சதெல்லாம் ஏழைச் சனங்களின்றை பிள்ளையன் எண்டபடியால் அதெல்லாம் மனித உரிமை மீறலெண்டு தெரியவில்லை". எனப் பேசுகிற முன்னாள் இயக்கத்தினன், "யுத்தத்தைப் பாவிச்சு வெளியாள போக விரும்பினவங்கள் எல்லாம் போன பிறகு கடைசியா உங்களோடை நிண்ட சனங்களைப் பிடிச்சுச் சண்டைக்கு வா என்றால் அது கடைசி வரை உங்களோடை நின்னதுதான் அதுகள் செய்த குற்றமா?" என்று ஆவேசப்படுவது, நாவல் எழுப்புகிற முக்கியமான கேள்வி.

ஒடுக்கப்படும் மக்களுக்காகப் போராட முன்வருகிற போராளி, ஒருநிலையில் மக்களைவிடத் தன்னை மேன்மையானவனாகக் கருதுவதும், மக்கள் மீது அதிகாரம் செய்கிறவனாக மாறுவதும் இயக்கங்களில் நடைபெறுவதைச் சயந்தன் நுட்பமாகப் பதிவாக்கியுள்ளார். அமைப்பின் தலைமையின் மீதான விமர்சனமோ, அமைப்புச் செயல்பாடுகள் குறித்துக் கேள்வி கேட்பதோ துரோகமாகக் கருதப்படுவது விடுதலைப் புலிகள் உள்ளிட்ட எல்லா இயக்கங்களிலும் நடைமுறையில் இருந்தது. ஆனால் மக்கள்

எல்லாவற்றையும் குறித்துக் கடுமையான விமர்சனங்களை மனதுக்குள் வைத்திருந்தனர் என்பது ஆதிரை நாவலில் அடியோட்டமாக உள்ளது. துரோகி எனக் கருதப்பட்டவனை முச்சந்தியில் வைத்து இயக்கம் துப்பாக்கியினால் சுட்டுக்கொல்வதைப் பள்ளிக்கூட மாணவர்கள் வேடிக்கை பார்க்குமளவு, வன்முறை ஆழமாக ஊடுருவியிருந்த சூழலைச் சந்திரா கடுமையாக விமர்சிக்கிறாள். இன்று முள்ளிவாய்க்காலில் ஒதுங்கின சண்டை, ஒருக்கால் யாழ்ப்பாணத்து நகரத்துக்குள் நடைபெற்றிருந்தால், பிரபாகரனே சண்டையை நிப்பாட்டு என வெளிநாட்டில் ஊர்வலம் கிளம்பியிருக்கும் என நந்தன் விமர்சிக்கிறான். ஆயிரமாயிரம் பெண்களும் சேர்ந்து போராடிய விடுதலைப் போராட்டத்தில் வெற்றி தோல்வி என எதுவும் இல்லை என விளிம்பு நிலையினரான அத்தார் சொல்வது கவனத்திற்குரியது. சயந்தன் நாவல் முழுக்க ஈழத்துப் போராட்ட வரலாற்றினை விமர்சனத்துடன் முன்வைத்துள்ளார். இருண்ட வானத்தில் ஒளிர்ந்திடும் விண்மீனான ஆதிரை என்றும் ஈர்க்கும் இயல்புடையது. அம்பாறையில் ஜோன் தமிழரசியாகப் பிறந்து, இயக்கத்தில் ஆதிரையாக மாறி, இறுதியில் போர்க்களத்தில் தன்னையே பலியாகத் தந்த பெண் போராளியின் இழப்பு என்பது வெறுமனே கதைதானா?

ஈழப்பிரச்சினையை முன்வைத்து விரிந்திடும் கதைப்பரப்பில் அவை வரலாறாகவும் உருமாறுகின்றன. புலம் பெயர்ந்த தமிழரான சயந்தன் ஈழப் போராட்டம் முழுவதையும் தனது நோக்கினில் கதையாக்கினார் எனில், தமிழ்நதி ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் நிகழ்ந்த சம்பவங்ளைப் பார்த்தீனியம் என்ற பெயரில் நாவலாக்கியுள்ளார். எண்பதுகளின் தொடக்கத்தில் ஈழத்தில் கணிசமான இளைஞர்கள் ஆயுதம் ஏந்திய போராட்டத்திற்காக இயக்கங்களில் பங்கேற்று, இந்திய மண்ணில் பயிற்சியெடுத்த சூழலில் தொடங்குகிற நாவல், 1990–இல் இந்திய அமைதி காப்புப்படை ஈழத்தைவிட்டு வெளியேறுவதுடன் நிறைவடைகிறது. வசந்தன் – வானதி ஆகிய இருவருக்குமிடையில் தோன்றும் காதல், நாவலின் இறுதிவரை நீள்கிறது. இயக்கத்தில் சேர்ந்த வசந்தன் இந்தியாவில் ஆயுதப் பயிற்சி பெற்று, பரணி என்ற பெயருடன் மீண்டும் ஈழத்திற்கு வருகிறான். சகோதர இயக்கங்கள் இடையிலான மோதல், ஆள் கடத்துதல், கூட்டக் கொலைகள் தொடர்கின்றன. இன்னொருபுறம் இந்திய அரசின் அமைதி காப்புப் படை ஈழத்தில் நுழைந்ததன் காரணமாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் எனத் தமிழ்நதி அரசியலை முன்வைத்துக் கதைக்கிறார். ஈழத்தில் இந்திய ராணுவத்தின் வெறியாட்டம், பாலியல் வன்புணர்வுகள், அத்துமீறல்கள், கொலைகள், வன்முறைகள், சித்ரவதைகள் போன்றவற்றைப் பதிவு செய்தல்தான் நாவலின் முதன்மை நோக்கமாகும். ஒருவகையில் ஈழத்தமிழரின் போராட்ட வரலாறு, இந்திய அமைதி காப்புப் படையின் பின்புலத்தில் சொல்லப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர்களான பிரபாகரன், மாத்தையா, கிட்டு போன்றவர்களும் பிற தளபதிகளும் அதே பெயரில் நாவலில் இடம்பெறுவதனால், கதையாடல் புனைவிற்கும் வரலாற்றுக்கும் இடையே ஊடாடுகிறது. இந்திய அமைதி காப்புப் படையின் ஆதரவுடன் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., போன்ற பிற இயக்கங்கள் நடத்திய கொலைகள், சித்ரவதைகள் நாவலில் பதிவாகியுள்ளன. அன்றைய காலகட்டத்தில் இயக்கங்களுக்கு இடையிலான பூசல்கள், தனிப்பட்டரீதியில் கொலையாக மாறின. இராணுவக் கட்டுப்பாட்டிலான

இயக்கத்தில் தனிமனித மனிதமையப் பார்வைக்கு இடமில்லை. வேற்று இயக்கத்தைச் சார்ந்த றீகன் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு மாத்தையாவின் பிடிவாதம்தான் காரணமாகிறது. எல்லோரும் ஏதோ ஒருவழியில் இயக்கத்தின் செயல்பாடுகளுக்குக் காரணமாகிறார்கள். மாத்தையாவின் அராஜகம் குறித்த பரணியின் வெறுப்பு, இறுதியில் அவன் இயக்கத்தில் இருந்து வெளியேறுவதற்கு அடிப்படையாக அமைகிறது. புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றிய சம்பவங்கள் பெரிய அளவில் நாவலில் இடம் பெறாமையினால், நாவலின் நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாகிறது. சமகால வரலாற்றைப் படைப்பாக்குகிற முயற்சியெனில் பிரச்சினையின் இன்னொரு பக்கத்தையும் அவதானிக்க வேண்டியது அவசியம். விடுதலைப் புலிகள், பிற விடுதலை இயக்கங்களைத் தடை செய்ததற்கு மக்கள் ஆதரவாக இருந்தனர் என்ற பார்வையில் தமிழ்நதி சொல்கிற கதைப்போக்கு ஏற்புடையதுதானா? மேலும் ஜனநாயக முறையில் குரல் கொடுத்த அறிவுஜீவிகளைப் புலிகள் கொன்றொழித்தது போன்ற சம்பவங்கள் குறித்து நாவல் மௌனம் சாதிக்கிறது. நிறைவேறாத காதலின் ஊடாக வானதியின் துணிவான முடிவு, முன்னாள் போராளியான பரணிக்குக் கிடைத்த இன்னொரு வகையான தண்டனையா? எண்பதுகளில் ஈழத்தமிழர் எதிர்கொண்ட முக்கியமான பிரச்சினைகளை மையமாகக் கொண்டு விரிந்திடும் பார்த்தீனியம் நாவல், ஒரு காலகட்டத்தின் வரலாற்றுப் பதிவு.

எண்பதுகளின் தொடக்கத்தில் ஈழப் போராட்டம் உக்கிரமடைந்தபோது, தன்னலம் கருதாத இளைஞர்கள் இயக்கங்களில் சேர்ந்தனர். தமிழ் அடையாளத்திற்கான ஆயுதம் தாங்கிய சமரில், பங்கேற்றவர்களில் சிலர் பின்னர் தங்களுடைய அனுபவங்களைப் படைப்பாக்கினர். இத்தகையோரில் ஒருவரான குணா கவியழகன் முள்ளி வாய்க்காலுக்குப் பின்னர் ராணுவத் தடுப்பு முகாமில் அடைபட்டு இருந்தார். பின்னர் அங்கிருந்து வெளியேறி ஐரோப்பிய நாடொன்றில் தஞ்சம் அடைந்துள்ளார். குணாவின் நஞ்சுண்ட காடு நாவல், காட்டிலுள்ள விடுதலைப் புலிகளின் பயிற்சிக் களத்திற்குக் கொண்டுவரப்பட்ட குழுவினரின் அனுபவங்களின் பின்புலத்தில் விரிந்துள்ளது. கதைசொல்லி பயிற்சி முகாமின் நிலை, பயிற்சி, தண்டனை, போராளிகள் உருவாகிற சூழலைச் சொல்வது குறிப்பிடத்தக்கது. முகாமில் பயிற்சி பெற வந்துள்ளவர்களின் குடும்பப் பின்புலம், வறுமை, பெண்களின் துயரமான நிலை போன்றவை போராளிகளின் பின்புலத்தைச் சித்திரிக்கின்றன. குறிப்பாகச் சுகுமாரின் மெல்லிய தோற்றமுடைய அக்கா எதிர்கொள்கிற அவலங்கள் கதைசொல்லியின் மூலம் ததும்புகின்றன. சிங்கள ராணுவத்தை எதிர்த்துப் புலிகள் போரடுகிற சூழலில், புலம்பெயர்ந்திட்ட எளிய மக்களின் வாழ்வியல் துயரங்கள் நாவலில் முதன்மையிடம் பெறுகின்றன. இக்கட்டான சூழலில் குடும்பத்தினரைக் கைவிட்டக் கரும்புலியாக மாறிய சுகுமார் மோதலில் தன்னுயிரை இழக்கிறான். இறுதியாகச் சுகுமார் எழுதிய வரிகள்: “விடுதலைக்குத் தக்க விலைதான் கொடுக்கலாம். அதற்கு மேலால் கொடுக்க முடியாது. கொடுக்கக்கூடாது. கொடுக்க நேர்ந்தால் நாங்கள் தோற்றுவிடக்கூடும் என எண்ணுகிறேன்.” இயக்கப் போராளியான குணா கவியழகன் 2004–இல் எழுதிய நாவல், அன்றைய காலகட்டத்தில் வெளியாகி இருந்தால், நிச்சயம் அவருடைய கதை

முடிந்திருக்கும். விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் செயல்பட்டவாறு, போராட்டத்தினால் சனங்கள் படுகின்ற பாடுகளை நேரடியாகக் கண்டதினால் ஏற்பட்ட மன உளைச்சலின் விளைவுதான் குணாவின் நாவலாக்கத்திற்கு முதன்மைக் காரணமாக இருக்க முடியும். போராட்டம் பற்றிக் கதைக்கத் தொடங்கிய குணாவின் எழுத்து, அவரையறியாமல் மெல்லப் போருக்கு எதிரானதாக மாறிவிட்டது. ஈழப் போர் குறித்துப் பெருமிதமான உணர்வுடன் சொல்லப்படுகிற கதைகளுக்கு மாறான தளத்தில் சொல்லப்பட்டுள்ள நஞ்சுண்ட காடு நாவல் எழுப்புகிற கேள்விகள் முக்கியமானவை. அவை போரின் மறுபக்கமாக உள்ளன.

அப்பால் ஒரு நிலம் நாவல் மூலம் குணா கவியழகன் சித்தரிக்கிற போர்க்களக் காட்சிகள், சம்பவங்கள், தமிழில் இதுவரை யாரும் பதிவாக்கிடாத புதிய உலகினுக்கு இட்டுச் செல்கின்றன. அப்பால் தெரியும் நிலம் என்பது ஒருவகையில் பொறி போன்றது. அந்த நிலம் உருவாக்கிடும் கனவுகள் கவர்ச்சிகரமானவை. போர் இலக்கியம் என்ற வகைமாதிரியில் அடங்குகிற நாவலின் கதைக்களன், விடுதலைப்புலிகளின் வேவுப் படையினரின் துணிச்சலான முயற்சியை விவரிக்கிறது. தொடக்கத்தில் கெரில்லாப் போர் புரிந்த புலிகள், பின்னர் மரபான ராணுவம் போல செயல்படத் தொடங்கினர். எதிரிகளின் முற்றுகையைத் தகர்த்தல், எதிர்களை பாய்ந்து தாக்குதல் எனப் போர்த் தந்திரம் மாறியது. இந்நிலையில் எதிரிகளான சிங்கள ராணுவ முகாமிற்குள் ரகசியமாக ஊடுருவி, அங்கிருந்து வேவுப் படையினர் திரட்டிவரும் தகவல்கள் முக்கியமானவை. அவை எதிரியைப் பற்றி மதிப்பிடுவதற்கும், அடுத்தகட்ட தாக்குதலை வெற்றிகரமாகத் திட்டமிடுவதற்கும் அடிப்படையானவை. சிங்கள ராணுவத்தின் பிடியில் இருக்கும் கிளிநொச்சியை மீட்பதற்கு முயலுகிற புலிகளுக்கு உதவுவதற்காகக் கிளம்புகிற வேவுப்படையினர் பற்றிய சித்தரிப்புகள், வாசிப்பில் பதற்றத்தை ஏற்படுத்துகின்றன இறுக்கமான அமைப்பாகப் புலிகளின் ராணுவம் செயல்படுதல், தாக்குதலுக்கான திட்டமிடல், முறையான பயிற்சி, இலக்கை அடைந்திடுவதற்கான வீரர்களின் முயற்சிகள், போர்க்களத்தில் காயம்பட்ட வீரர்களைக் காப்பாற்றுதல், பொதுமக்களுடன் கலந்துறவாடுதல் எனப் போரை முன்வைத்த குணாவின் பதிவுகள் அழுத்தமானவை. ஒரு தலைமுறைக்குப் பின்னரும் தொடர்ந்திட்ட ஈழத்துப் போர், சராசரி மனிதர்களின் வாழ்க்கையை நாசமாக்கியது. அந்த நெருக்கடியான நேரத்திலும் அநியாயமாக ஈழத்தமிழர்கள்மீது திணிக்கப்பட்ட போரை நியாயமான போரின் மூலம்தான் வெல்ல முடியும் என்பதுதான் உண்மை. 'ஓயாத அலைகள் 02' என்ற நடவடிக்கையின் மூலம் புலிகள் நிகழ்த்திய அதிரடித் தாக்குதலின் வெற்றிக்கு அடிப்படையாக விளங்கிய வேவுப் படையினர் பற்றிக் கதைப்பதாக குணா சொல்வது கவனத்திற்குரியது. போரின் வெற்றியில் பொதிந்திருக்கிற வேவுப்படையினரின் கடும் உழைப்பு, களத்தில் போராடுகிற போராளிகளுக்குக்கூடத் தெரியாது. சாமர்த்தியமும் உடனடியாக முடிவெடுக்கும் செயல்திறனும், துணிவும், மரணம் குறித்த அச்சமற்ற மனமும் வேவு படையினரின் அடிப்படைக் குணங்களாக இருப்பது நாவலில் பதிவாகியுள்ளது. மணி, வீரன் என்ற இரு வேவுக்காரர்கள், எதிரியான சிங்கள ராணுவ முகாமிற்குள் ஊடுருவிய செயல், ஒருவகையில் சாகசம்தான். எந்த நேரத்திலும் எதுவும் நடப்பதற்கான சூழலில்,

சாவு நிழலெனத் தொடர்கிற நிலையில் இயங்குகிற வேவுக்காரர்கள் பற்றிய அப்பால் ஒரு நிலம் நாவல், முழுக்க ராணுவரீதியிலானது.

ஆயுத எழுத்து நாவலின் ஆசிரியரான சாத்திரி, எண்பதுகள் தொடங்கி விடுதலைப் புலிகள் அமைப்பில் செயலாற்றியவர். அவருடைய பல்லாண்டு இயக்க அனுபவங்கள் ஆயுத எழுத்து நாவலாக விரிந்துள்ளன. இந்த நாவலில் இடம் பெற்றுள்ள அவன் யார் என்பது முக்கியமான கேள்வி. போராட்டக் களத்தில் முனைப்புடன் செயல்பட்ட பல்வேறு அவன்களின் தொகுப்பாகக் கருதமுடியும். ஈழப் போரில் பங்காற்றிய கிட்டு, மாத்தையா, லோரன்ஸ், பொட்டு அம்மான், கரிகாலன், ஸ்ரீசபாரத்தினம் போன்றோர் நாவலில் அதே பெயர்களில் இடம் பெற்றிருப்பது, புனைவு என்பதற்கப்பால் நிஜம் என்ற மனநிலையை வாசிப்பில் உருவாக்குகிறது. நாவலில் வரும் கதைசொல்லி தன்னிலையை விமர்சனம் செய்கிறான். அதே வேளையில் விடுதலைப்புலிகள் அமைப்பையும், ஆயுதமேந்திய பிற இயக்கங்களையும், போராளிகளான முன்னணித் தலைவர்களையும், சிங்கள அரசினையும், உளவுத்துறையையும் பற்றிக் கதைத்திருப்பது, சூழல் மீதான அரசியல் விமர்சனமாக வெளிப்பட்டுள்ளது. ஈழ விடுதலைப் போர் என்ற சொல்லுக்குப் பின்னால் பொதிந்திருக்கிற வன்முறை எப்படியெல்லாம் இயல்பாகத் தமிழ்ச் சமூகத்தில் பரவியிருந்தது என்பதை நாவல் நுட்பமாகப் பதிவாக்கியுள்ளது. துப்பாக்கியின் விசையை அழுத்துதல் என்பது இயந்திரமயமானது அல்ல. ஆனால் அமைப்பு போராளிகளிடம் உருவாக்கியிருக்கும் மனநிலையானது, மனித உயிரிழப்பைத் துச்சமாகக் கருதுகிறது. முடிவற்ற தாக்குதல்கள், சித்ரவதைகள், கொலைகள் என விரியும் கதையாடலில் சிங்கள ராணுவம், இந்திய அமைதி காப்புப் படை, இஸ்க்கங்களின் ராணுவம் நிகழ்த்திய வன்முறையில் ரத்தக் கவிச்சி அடிக்கிறது. 1990– ஆம் ஆண்டில் யாழ்குடா நாட்டில் பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்களை வெளியேற்றியது பற்றிய விவரணைகள் முக்கியமான பதிவாகும். நாவலில், சித்திரிக்கப்பட்டுள்ள அவன் எப்படி மதிப்பீடுகள் எதுவுமற்றுக் கொலைகள் செய்வதை ஏற்றுக்கொண்டான் என்பது வாசிப்பின் வழியாக சாத்திரி முன்வைக்கும் அடிப்படையான கேள்வி. இந்திய அமைதி காப்புப் படையின் கொடூரத்தைத் தொடர்ந்து அவன் பிரான்ஸ் நாட்டிற்குச் செல்கிறான். புலிகளுக்காகச் சர்வதேச சந்தையில் ஆயுதக் கொள்முதல் செய்கிறான். இயக்கம் ஆணையிடுவதைக் கேள்விகள் எதுவுமற்று அப்படியே நிறைவேற்ற முயலுகிற அவன் பிரெஞ்சுப் பெண்ணைக் காதலிக்கிறான். என்றாலும் அவளுக்குத் தெரியாமல் பிரான்ஸ் நாட்டைவிட்டு வெளியேறுவதற்குக் காரணம் இயக்கத்தின் தாக்கம்தான். 2009 முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்குப் பின்னர் அவனும் கொல்லப்படுகிறான். ஈழத்தில் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தைச் சித்திரிக்கிற நாவல்களின் பொதுப்போக்கில் இருந்து ஆயுத எழுத்து மாறுபடுகிறது. ஆயுதம் தாங்கிய போராட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்காகப் புலிகளின் தொடர்பு, சர்வதேசியரீதியில் எங்ஙனம் விரிந்துள்ளது என்ற சாத்திரியின் விவரிப்பு தனித்துவமானது. உயர்ந்த லட்சியத்துடன் தமிழீழம் எங்கள் தாயகம் என்ற முழக்கத்துடன் தொடங்கப்பட்ட ஈழத்துப் போராட்ட இயக்கங்கள் எதிர்கொண்ட

சம்பவங்களை 'அவன்' மூலம் சாத்திரி சித்திரித்துள்ளது, நுண்ணரசியல் சார்ந்து. ஈழத் தமிழர் போராட்டக் காலத்தில் எதிர்கொண்ட வன்முறைச் சம்பவங்களின் பின்புலத்தில் சாத்திரி வரலாற்றை மீளாய்வு செய்துள்ளார்.

புலம் பெயர்ந்து வாழ்கிற சயந்தன் எழுதிய முதல் நாவலான ஆறா வடு போரின் பாரதூரமான விளைவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இந்திய அமைதி காப்புப் படையின் நுழைவு தொடங்கி, ரணில் விக்கிரமசேனாவின் அமைதி முயற்சியிலான காலகட்டத்தின் பின்புலத்தில் சராசரியான ஈழத்தமிழரின் வாழ்க்கையும் போரும் எப்படிப் பின்னியுள்ளன என்று நாவல் விவரிக்கிறது. ஈழ விடுதலைப் போர்ச்சூழலை விடுதலைப் புலிகள், சிங்கள அரசும் ராணுவமும், பிற போராளி இயக்கங்கள், இந்திய அமைதி காப்புப் படை, அமைதிக்கான முயற்சியை மேற்கொண்ட நோர்வே, ஜப்பான் நடுநிலையாளர்கள் எனப் பிரச்சினையானது வேறுபட்ட கோணங்களில் அணுகியுள்ள சயந்தனின் எழுத்து, இன்னொரு நிலையில் போரின் வலியைப் பேசுகிறது. நீர்கொழும்புவில் இருந்து கடல் வழியாக இத்தாலி சென்று அங்கிருந்து பிரான்ஸ் செல்லத் திட்டமிடுகிற முன்னாள் விடுதலைப் புலியைப் பற்றிய விவரிப்பில் இவன் எனக் குறிப்பிடுவது, யாருக்கும் நிகழலாம் என்பதன் குறியீடு. போர்க்களத்தில் ஒரு காலை இழந்த இவனின் பயணம், இந்திய அமைதி காப்புப் படையிலும் பின்னர் புலிகள் இயக்கத்திலும். கதைசொல்லியான சயந்தன் சொல்கிற கதைகள், போரினால் சிவில் சமூக வாழ்க்கை சிதைவடைந்த சூழல், ரத்தக்கவிச்சியுடன் சொல்லப்பட்டுள்ளது. அவ்வப்போது மாறிவரும் அரசியல் நிலைமைகளினால் அல்லல்படுகிற வாழ்க்கையினால் வெறுப்படைந்து எப்படியாவது வெளிநாட்டுக்குத் தப்பியோட முயலுவதும் மரணத்தில் முடிகிறது. பதினான்கு வயதான சிறுவன், வயதான பெரியப்பா என அறுபது பேர் பயணித்த வசதியற்ற வள்ளம் அலையில் மூழ்குகிறது. ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது. யுத்தம்தான் தமிழர்களைத் துரத்துகிறது. இன்னொருபுறம் அதிகாரமும் வன்முறையும். இக்கட்டான சூழலிலும் எப்படியாவது வாழத் துடிக்கிற ஈழத்தமிழரின் கதைகள், ஆறாத வடுக்களாக இருப்பதைச் சயந்தன் சொல்ல விழைகிறாரா?

புலிகள் இயக்கப் போராளியான வெற்றிச்செல்வியின் போராளியின் காதலி நாவல், போர்க்களத்தின் பின்புலத்தில் பணியாற்றுகிற மருத்துவர்கள், செவிலியர்கள் பற்றிய விவரிப்பின் ஊடாகக் காதலைச் சொல்கிறது. சுமதி என்ற தாதிக்கும் வாமன் என்ற இயக்கப் போராளிக்குமிடையில் அரும்புகிற மெல்லிய காதல் ஒருபுறம் எனில் கிளிநொச்சி, வன்னி என ஒவ்வொரு பிரதேசமாகப் புலிகள் இழக்கிற சமரில் காயமடைந்தவர்கள் மீது அக்கறையுடன் மருத்துவ சிகிச்சை அளிக்கிற மருத்துவக் குழுவினர் இன்னொருபுறம். சிங்கள ராணுவத்தின் குண்டு வீச்சில் இறுதிக்கட்டத்தில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்க்கும், கடுமையாகக் காயமடைந்தவர்களும் நிரம்பிய வேதனையான சூழலிலும் மருத்துவர்களும் தாதிகளும் ஏதாவது சிகிட்சை அளிக்க முயலுவது, மனிதமையப் போக்கின் உச்சமாகும். எளிய மொழியில் சொல்லப்பட்டிருக்கும் நாவலின் கதை சொல்லல், நெடிய ஈழப் போரினால் காயம் அடைந்தவர்களின் வலியையும் இழப்பையும் பதிவாக்கியுள்ளது. சிலுவையில்

அறையப்பட்ட ஏசு, 'ஏன் தேவனே! என்னைக் கை விட்டீர்' எனக் கதறியது போல முள்ளிவாய்க்காலில் ஆதரவற்றுக் கதறிய தமிழர்களின் அவலத்தையும் வேதனைகளையும் நாவலாக்கியுள்ள வெற்றிச்செல்வியின் பதிவில் ஈழப் போரின் துயரம் கசிகிறது.

ஈழப் போராட்டத்தின் தொடக்ககாலத்தில் இயக்கத்தில் இருந்து, தற்சமயம் புலம்பெயர்ந்து வாழ்கிற ஷோபாசக்தி, Box கதைப்புத்தகம் மூலம் தொடர்ச்சியுறு முறையில் கதைசொல்கிறார். இயக்கத்தினரும் சிங்கள ராணுவத்தினரும் உடல்கள் மீது நடத்துகிற வதைகள் கதையெங்கும் ததும்புகின்றன. அதிலும் நிர்வாணமான பெண்ணுடலை வைத்து, ராணுவத்தினர் நடத்துகிற வன்புணர்ச்சி உள்ளிட்ட கொடூரத்தின் பின்னர் பொதிந்திருக்கும் வன்முறை மனநிலை முக்கியமானது. Box எனப்படும் பெட்டி வடிவத்தில் தனிமைப்படுத்திச் சகமனிதர்கள் கொல்லப்படல் அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றுதல் நடைபெறுகிறது. பண்டார வன்னியன், புலிகள், பெரிய பள்ளன் குளம் கிராமத்தினர் எனப் பெட்டியடிக்கப்பட்டது உக்கிரமான மொழியில் விவரிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் அரசியல் செயல்பாடுகளுடன் முரண்படுகிற ஷேபாசக்தியின் முந்தைய கொரில்லா நாவலுடன் ஒப்பிடுகையில் ஆர்ஷ் நாவலின் கதையாடலில் நம்பகத்தன்மை குறைவாக உள்ளது. ஈழத்துப் போர் உச்சமடைந்த சூழலில் பெண் புலிகளின் உடல்கள் மீது சிங்கள ராணுவம் நடத்திய பாலியல் அத்துமீறல்கள், வாசிப்பில் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. போர் முடிவடைந்த பின்னர் நீர்கொழும்பு, காலி போன்ற சுற்றுலா மையங்களில் பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள் போன்றோரை வைத்துச் சிங்கள அரசியல்வாதிகளும் மாபியாக்களும் நடத்துகிற பாலியல் வியாபாரம் பற்றிய கதையாடல் வலியை உண்டாக்குகிறது. ஈழப் போரை முன்வைத்து ஷோபாசக்தி நாவலின் மூலம் எழுப்பியுள்ள கேள்விகள்தான் முக்கியம்.

முப்பதாண்டுகளாக நடைபெற்ற ஈழத்துப் போரின் விளைவுகளைப் பதிவாக்கியுள்ள ஸ்ர்மிளா ஸெய்யித்தின் உம்மத் நாவல், பெண்களுக்கு ஏற்பட்டுள்ள தனிப்பட்ட சிக்கல்களைக் களனாகக் கொண்டுள்ளது. கிழக்கிலங்கையின் மட்டக்களப்புப் பகுதியைச் சார்ந்த முன்னாள் போராளிகளான யோகாவும் தெய்வானையும் போருக்குப் பிந்திய காலத்தில் எதிர்கொள்கிற பிரச்சினைகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் பணியாற்றும் தவக்கல் மதஅடிப்படைவாதிகளின் அச்சுறுத்தலுக்குள்ளாவதும்தான் நாவலின் கதை. போர்க்காலத்தின்போது மக்களுக்கேற்பட்ட துயரங்களின் பின்புலத்தை விவரிக்கிற நாவல், போரைக் கண்டனம் செய்கிறது. போர் என்பது எப்போதும் மக்களின் நலனுக்கு எதிரானதுதான். அதிகாரத்திற்கான போட்டியின்போது நடைபெறுகிற போரின் கொடூரங்கள் அளவற்றவை. ஆனால் ஹிட்லர் போன்ற பாசிஸ்ட் அராஜகமாக யுத்தத்தைத் திணிக்கும்போது, நேர்மையான யுத்தத்தினால்தான் அதை முறியடிக்க முடியும் என்பதை வரலாறு உணர்த்தியிருக்கிறது. ஐம்பதுகள் முதலாகச் சிங்கள மொழியைத் தேசிய மொழியாக அறிவித்ததுடன் புத்த பிக்குகள் ஸ்ரீலங்கா அரசியலை முழுக்கப் புத்த மதத்துடன் இணைத்துத் தமிழர் பண்பாடு மீது ஏற்படுத்திய பாதிப்புகள் பற்றி

நாவலாசிரியைக்கு எதுவும் தெரியாதா என்ற கேள்வி தோன்றுகிறது. போரினால் காலை இழந்த முன்னாள் போராளியான யோகா, வீடு திரும்பியபோது, குடும்பத்தினரால் முற்றாகப் புறக்கணிப்பிற்குள்ளாவதும், அவளுடைய மாமாவினால் பாலியல் வன்புணர்ச்சிக்குள்ளாதினால் தீயிட்டுக்கொண்டு செத்துப் போனாள் என்று ஸர்மிளா கதைப்பது, ஈழத்துப் போர் குறித்த எதிர் மனநிலையின் வெளிப்பாடு. யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் முஸ்லீம்கள் புலிகளால் அநியாயமாகத் துரத்தப்பட்ட சம்பவம் ஏற்படுத்திய வேதனையின் வெளிப்பாடாகவும் ஸ்ர்மிளாவின் நாவலைக் கருத முடியும். ஈழப் போரின் மோசமான விளைவுகளை மட்டும் முன்வைத்துச் செயற்கையான மொழியில் வறண்ட சம்பவங்களுடன் யதார்த்த நாவலுக்குரிய நம்பகத்தன்மை இல்லாமல் எழுதப்பட்டுள்ள உம்மத் நாவலில் போர் எதிர்ப்பு பிரச்சார நெடி அடிக்கிறது.

ஒரு சல்லிக்கும் பயனற்ற உதவாக்கரைச் செயல் என்பது விமல் குழந்தைவேல் எழுதியுள்ள கசகறணம் நாவலின் பொருள், குறியீட்டு நிலையில் இயக்கத்தினரின் போராட்டத்தை விமர்சிக்க முயலுகிறது. கிழக்கிலுள்ள அம்பாறை மாவட்டத்தை முன்வைத்து எழுதப்பட்டுள்ள நாவலில் அக்கறைப்பற்று கிராமத்துச் சந்தையில் வியாபாரம் செய்கிற குறட்டக்காக்கா, வெள்ளும்மா, மையிலிப்பொத்தா, குலத்தழகி போன்ற ஏழை வியாபாரிகளைச் சுற்றி நடைபெறுகிற சம்பவங்கள் முக்கியமானவை. ஆயிரமாண்டிற்கும் மேலாகத் தமிழர்களுக்கும் தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கும் இடையில் இணக்கமான உறவு நிலவுகிறது. மதத்தால் வேறுபட்டிருந்தாலும் இரு வேறுபட்ட சமூகத்தினரும் பரஸ்பர நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் முஸ்லீம்களுக்கும் தமிழர்களுக்கும் இணைப்பாக இருந்த சந்தை எரிக்கப்பட்ட பின்னர், சூழலில் பெரிய மாற்றம் ஏற்படுகிறது. கிழக்கு மாவட்ட அரசியல், சமூகச் சூழலுக்குப் பொருத்தமற்ற நிலையில் நுழைந்த இயக்கங்களினால் பிளவுண்ட சமூகங்களின் கதைதான் கசகறணம் நாவலின் மையம். முகமட், கேசவன் என்ற இரு இயக்கப் போராளிகளின் வருகையினால் ஏற்பட்ட பிரச்சினைகளை விவாதிக்கிற நாவலாசிரியரின் போராட்டம் குறித்த விவரிப்புகள் நுண்ணரசியல் சார்ந்தனவாகும். போராளி தாடி வைத்திருப்பதனாலும், தோழர் என அழைக்கப்படுவதாலும் அந்த இயக்கம் புளொட் அல்லது ஈ,பி,ஆர்,எல் எஃப் ஆக இருக்கலாம். ஓரிரவிற்குள் புட்டம்பைக் கிராமத்தில் காலங்காலமாக வாழ்ந்த முஸ்லிம்களை வெளியேறுமாறு இயக்கம் வெளியிட்ட ஆணை, இயல்பான சூழலைச் சிதைக்கிறது. அன்றாடம் வயிற்றுப்பாட்டுக்காகப் போராடிய எளிய மக்களின் வாழ்க்கையைச் சிதலமாக்கியது இயக்கத்தின் செயல்பாடு எனக் கதைக்கிற விமல் குழந்தைவேல், ஈழப் போராட்டத்தின் இன்னொரு பக்கத்தைப் பதிவாக்கியுள்ளார். ஈழத்தமிழர் என்ற சொல்லுக்குப் பின்னர் பொதிந்திருக்கும் பன்முக அம்சங்கள் பற்றிய புரிதல் தமிழகத்தில் மிகக்குறைவு. இன்றைக்கும் மலையகத்தில் வாழ்கிற இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கும் யாழ்ப்பாணத்து வெள்ளாளத் தமிழர்களுக்கும் இடையிலான முரண் வலுவானது. ஈழப் போர் என்றால் தமிழரின் விடுதலை, தமிழீழம் என்ற பொதுப்புத்தி வலுவாக நிலவிய சூழலில், ஈழப் போராட்டம் பற்றிய இன்னொரு பரிமாணத்தைக்கொண்ட கசகறணம் நாவல், புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் வெளியாகியிருப்பது கவனத்திற்குரியது.

ஸ்ர்மிளாவின் உம்மத் நாவலுடன் ஒப்பிடுகையில் கசகறணம் நாவல், போருக்கு எதிரான நிலைப்பாட்டினைத் தருக்கரீதியில் நம்பகத்தன்மையுடன் விளக்கியுள்ளது.

குருதி சிந்திடும் போரில் அதிகாரம் கைக்கு வந்துவிட்டால் அது வெற்றி, அதிகாரத்திற்கு அடிபணிய நேரிட்டால் அது தோல்வி. யோசிக்கும்வேளையில் வெற்றிக்கும் தோல்விக்குமான முரணாகத்தான் சமூக வரலாறு இருக்கிறது. ஈழப்போரின் இறுதியில் முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற கூட்டக்கொலைகளுக்குப் பின்னர் சிங்கள ராணுவத்திடம் சரணடைந்த மக்கள்திரளுடன் இயக்கப் போராளிகளும் இணைந்தனர். மக்களில் இருந்து பிரித்துத் தனியாக்கப்பட்ட முன்னாள் பெண் புலிகளும் போராளிகளும் ராணுவத்தினரின் விசாரணைக்குள்ளாயினர். தமிழீழம் குறித்த கனவுகளுடன் ஆயுதமேந்தி இராணுவத்தை எதிர்த்து வீரத்துடன் போராடியவர்கள், தோல்வி தந்த கசப்புடன் எதிரிகளிடம் அடிமைப்பட்டிருப்பது ஏற்படுத்தும் மனவேதனை அளவற்றது, இத்தகைய சூழலின் பின்புலத்தில் குணா கவியழகன் எழுதியுள்ள விடமேறிய கனவு நாவல், ஈழத் தமிழரின் தீராத வலியின் பதிவாகும். விசாரணையின் முடிவில் கொல்லப்படுவோமா? உயிர் தப்ப ஏதாவது வழி இருக்குமா? போன்ற கேள்விகளுடன் அடிப்படை வசதியற்ற முகாமில் வாடி வதங்குகிற போராளிகளின் அவலத்தைப் பேசுகிற நாவல், சமகாலத்தின் வரலாற்றுப் பதிவு. போராளிகளை முள்வேலி முகாம், கண்காணிப்பு முகாம், மறுவாழ்வு முகாம், சீர்திருத்த முகாம் என ஆண்டுக்கணக்கில் அடைத்து வைத்து உளவியல்ரீதியில் சித்ரவதைக்குள்ளாக்குகிறது சிங்கள அரசப் பயங்கரவாதம். முகாமில் அடி உதை என வதைக்குள்ளானாலும் எப்படியாவது வெளியே போய் நெருங்கிய உறவினர்களைப் பார்க்க மாட்டோமா என்ற ஏக்கத்தினால் அவமானங்களையும் வலிகளையும் சகித்துக்கொண்டு கைதிகளான முன்னாள் போராளிகள் பொறுமையுடன் காத்திருக்கின்றனர். கட்டுப்பாடான விடுதலை இயக்கம் எப்படி தோற்கடிக்கப்பட்டது என்பதை வெவ்வேறு கோணங்களில் முகாமலிருக்கும் நண்பர்கள் நுணுக்கமாக விவாதிப்பது, ஈழப்போரின் தோல்விக்கான காரணங்கள் பற்றிய புரிதலை ஏற்படுத்துகிறது. விசாரணைக் கைதிகளில் மூத்தவரான ராசு அண்ணர் பாடுகிற பாடல், போராளிகளுடைய நடப்பு வாழ்க்கையைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

தர்மம் ஒரு வாழ்வின் பொய்யோ
சூதே அதன் உள்ளின் மெய்யோ
பொய்யே அதன் பொருளும்தானோ–இல்லை
பொருளே பொய் தானோ
பொய்யும் மெய்யும் பொருளும் வாழ்வின்
மாயை மாயை மாயை தானோ?

தமிழீழப் போராட்டம் என்ற லட்சிய போதத்துடன் இயக்கத்தில் சேர்ந்தவர்கள், போர்க்களத்தில் எதிரியைச் சாகடிப்பதற்காகப் போராடினார்கள். அதேவேளையில் ஷெல்லடியின்போது போராளிகளின் வாழ்க்கையும் சாவின் விளிம்பில்தான். போரில் மரணத்தின் முன்னர் நின்றவர்கள், போருக்குப் பின்னர் இன்று முகாமிலும் மரணத்தின் முன்னர் காத்திருப்பது முடிவற்ற துயரமாகும்.

சின்னத் தீவான ஸ்ரீலங்காவில் தமிழ்த் தேசிய இனத்தை அழிப்பதற்கான சிங்களப் பேரினவாத அரசினை எதிர்த்த தமிழர்களின் போராட்டங்கள் இன்று தோற்றுப்போய் விட்டன. இந்நிலையில் தமிழர்கள், அதிகாரத்தில் இருக்கிற ஆட்சியாளர்களுடன் மட்டுமின்றி, பெரும்பான்மையினரான சிங்களவர்களுடன் இயைந்து போக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தோல்வி ஏற்படுத்திய வெறுமையும் கசப்பும் மனதுக்குள் நிரம்பி வழிந்தாலும், சராசரியான ஈழத்தமிழர்கள் அடுத்தகட்ட வாழ்க்கையை வாழவேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஈழப் போராட்டத்திற்கு இந்திய அரசும், தொப்புள்கொடி உறவுகளான தமிழகத்து அரசியல் பிழைப்புவாதிகளும் உதவுவார்கள் என்ற மாயை தகர்ந்த சூழலில் ஈழத்தமிழர்கள் சுயமான முடிவுகளை எடுக்க வேண்டிய நேரமிது.

ஈழப் போரின் பின்புலத்தில் எழுதப்பட்டுள்ள அரசியல் நாவல்கள், நடந்து முடிந்த சம்பவங்களின் வரலாற்றுப் பதிவுகளாக விளங்குகின்றன. முப்பதாண்டு காலத்தில் நிகழ்ந்த போராட்டத்தை நாவல்கள்தான் மீண்டும்மீண்டும் நினைவுபடுத்தும். ஈழப் பேராட்டம் தொடங்கியதற்கான காரணங்களை ஆராய்வது முதலாக இயக்கங்களின் போக்குகள், சிங்கள அரசின் செயல்பாடுகள், இந்திய அமைதி காப்புப் படை, போர்க்ளம், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை. புலிகள் மீதான விமர்சனம், சாவுகள், போர் குறித்த எதிர்மறையான கருத்துகள், போரின் பின்விளைவுகள் என நாவல்களின் களங்கள் பரந்துபட்டுள்ளன. ஒரு காலகட்டத்தில் நடைபெற்ற ஈழத்துப் போர் பற்றி விவரிக்கிற விமர்சிக்கிற நாவல்கள், தமிழர் வரலாற்றில் என்றும் முக்கியமான பதிவுகள். நிறைவாக, வேள்பாரி தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டவுடன், அவருடைய மகள்கள் பாடிய அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார் என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் என் நினைவுக்கு வருகின்றன.

**உதவிய நாவல்கள்**


1. சயந்தன், ஆதிரை. சென்னை; தமிழினி, 2015.
2. சயந்தன்.ஆறா வடு. சென்னை; தமிழினி, 2011.
3. ஷோபா சக்தி, Box கதைப் புத்தகம். சென்னை; கருப்புப் பிரதிகள், 2015.
4. விமல் குழந்தைவேல். கசகறணம். நாகர்கோவில்; காலச்சுவடு, 2011.
5. வெற்றிச் செல்வி. போராளியின் காதலி. சென்னை; தோழமை, 2012.
6. சாத்திரி. ஆயுத எழுத்து. திலீபன் பதிப்பகம், 2015.
7. தமிழ்நதி. பார்த்தீனியம், சென்னை; நற்றிணை, 2016.
8. ஸர்மிளா ஸெய்யித். உம்மத். நாகர்கோவில்; காலச்சுவடு, 2013.
9. குணா கவியழகன். விடமேறிய கனவு. சென்னை; அகல், 2015.
10. குணா கவியழகன். நஞ்சுண்ட காடு. சென்னை; அகல் 2015.
11. குணா கவியழகன். அப்பால் ஒரு நிலம், சென்னை; அகல், 2016. நன்றி; உயிர் எழுத்து, 2017 ஜீலை)